# 02. இரக்கத்தின் இறைவன் (திருவிருந்துப் பாடல்)

இயல்: மலர்

இசை, தனம் செபாஸ்டியன்

பாடியவர்: மார்ட்டினா

இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

பல்லவி

இரக்கத்தின் இறைவன் இதயத்தில் வருகிறார்
இருளின் ஆட்சியை இகமதில் அழித்தார்
இனிதே வரவேற்போம் இணைந்தே வாழ்ந்திடுவோம்.

சரணம்

1. கருவினில் நம்மைப் படைத்த நல்தேவன்
   கல்லறை உடைத்து எழுந்த நம் இறைவன்
   பாவியை மீட்க தன்னுயிர் ஈந்து
   பாசத்தால் நம்மைக் காக்கின்றார் - அந்த
   செம்மறியின் விருந்தினிலே கலந்திடுவோம்
   அவர்முன் மகிழ்ந்து பாடிடுவோம்.

2. உள்ளம் உடைந்தோரை குணமாக்கும் தேவன்
   உன்னத மீட்பை நல்கிய நம் இறைவன்
   அவரே ஆள்பவர் அவரே காப்பவர்
   அவனியை அன்பால் நிரப்புகின்றார் - அந்த
   செம்மறியின் விருந்தினிலே கலந்திடுவோம்
   அவர்முன் மகிழ்ந்து பாடிடுவோம்.

This song is prepared by **Iniya Ithayangal Whatsapp group** and linked in [www.manavai.com](http://www.manavai.com)
**(Easter 2022)**